# கொழும்புப் பல்கழைக்கழகம்
# கலைப்பீடம்

## பொதுக்கலைமாணி இரண்டாம் வருடப்பரீட்சை (பொருளியல்) – 2017/2018
## (முதலாம் அரையாண்டு பருவமுடிவு)

## ECN 2116 – இடைநிலை நுண்பாகப் பொருளியல்

**நேரம்: இரண்டு (02) மணித்தியாலங்கள் மட்டும்**

**எவையேனும் நான்கு (04) வினாக்களுக்கு விடையளிக்குக.**

---

1.

a) "பயன் என்பது அக உணர்வு சார்ந்ததும் திருப்தியிலிருந்து வேறுபட்டதுமாகும்." இக்கூற்றினை சுருக்கமாக விளக்குக.

(06 புள்ளிகள்)

b) எல்லைப்பயன் பகுப்பாய்வினை பயன்படுத்தி கேள்வி விதியினை விளக்குக.

(09 புள்ளிகள்)

c) மார்சலியன் பயன் அணுகுமுறையின் பணத்தின் நிலையான எல்லைப்பயன் என்ற எடுகோளின் முக்கியத்துவத்தை கலந்துரையாடுக. (10 புள்ளிகள்)

2.

a) சமபயன் வளையியின் பண்புகள் எவை? அவற்றை சுருக்கமாக விளக்குக.

(06 புள்ளிகள்)

b) ஹிக்ஸின் முறையினை பயன்படுத்தி ஒரு பொருளுக்கான கேள்வி வளையியினை பெறுக.

(07 புள்ளிகள்)

c) ஹிக்ஸ் மற்றும் ஸ்லஸ்கியன் முறையினை பயன்படுத்தி ஒரு விலை மாற்றத்தின் வருமான மற்றும் பதிலீட்டு விளைவுகளை வேறுபடுத்துக.

(12 புள்ளிகள்)

3.

a) "ஒரு கிபன் பண்டம் கட்டாயம் ஒரு இழிவு பண்டமாக இருக்க வேண்டும் ஆனால் இழிவுப்பண்டம் கிபன் பண்டமாக இருக்க வேண்டிய அவசியமில்லை." இக்கூற்றினை விலை விளைவு, பதிலீட்டு விளைவு மற்றும் வருமான விளைவு எண்ணக்கருக்களை பயன்படுத்தி விளக்குக.

(08 புள்ளிகள்)

b) வருமான சம மாறுபாட்டு முறையினை (Equivalent Variation in income method) பயன்படுத்தி இழிவுப்பண்டமொன்றின் விலை விளைவின் பதிலீட்டு மற்றும் வருமான விளைவுகளை வரைபடத்தை பயன்படுத்தி விளக்குக.

(12 புள்ளிகள்)

c) விருப்பத்தெரிவு கோட்பாட்டினை பயன்படுத்தி கேள்வி விதியினை விளக்குக.

(05 புள்ளிகள்)

4.

a) "குறைந்து செல்லும் எல்லை விளைவின் தவிர்க்க முடியாத தன்மையானது குறுங்கால உற்பத்திப் பகுப்பாய்வின் முக்கிய பொருளாதாரக் கோட்பாடுகளில் கையாளப்பட்டுள்ளது." இக்கூற்றினை விளக்குக. (05 புள்ளிகள்)

b) குறுங்கால உற்பத்தியின் மூன்று உற்பத்திக் கட்டங்களும் எவை? பகுத்தறிவான உற்பத்தியாளர் இரண்டாம் கட்டத்தில் மாத்திரம் உற்பத்தியினை மேற்கொள்வாரா? உமது விடைக்கான காரணங்களை தருக.

(12 புள்ளிகள்)

c) சம உற்பத்தி வரைபடத்தின் உதவியுடன் அதிகரிக்கும், மாறா மற்றும் குறைவடையும் அளவுத்திட்ட விளைவுகளை விளக்குக. குறைந்துச்செல்லும் அளவுத்திட்ட விளைவுக்கான காரணிகளை பரீட்சிக்குக.

(08 புள்ளிகள்)

5.

a) செலவு பகுப்பாய்வின் ஆழ் செலவு (Sunk Cost) மற்றும் சந்தர்ப்ப செலவுகளுக்கிடையிலான வேறுபாட்டை வேறுபடுத்துக.

(05 புள்ளிகள்)

b) கீழே தரப்பட்டுள்ள ஒரு நிறுவனத்தின் மொத்த செலவு தொழிற்பாடு மற்றும் மொத்த வருவாய் தொழிற்பாடுகளை கருத்திற் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

$TR = 25Q$

$TC = 100 + 20Q + 0.025Q^2$

I. இந்நிறுவனத்தின் மொத்த இலாபச் சமன்பாடு யாது?

II. இந்நிறுவனத்தின் எல்லை வருவாய் சமன்பாடு யாது?

III. இந்நிறுவனத்தின் எல்லைச்செலவு சமன்பாடு யாது?

IV. எவ் வெளியீட்டு மட்டத்தில் மொத்த இலாபம் உச்சப்படுத்தப்படும்.

V. இந்நிறுவனத்தினால் ஈட்டப்படும் இலாப அளவென்ன?

(2*5=10 புள்ளிகள்)

c) போட்டி நிறுவனத்தின் பின்வரும் செலவுச் சந்தர்ப்பங்களை கருத்திற் கொண்டு அட்டவணையின் MC, TR, TC மற்றும் இலாபம் என்பவற்றை நிரப்புக.

| வெளியீடு (Q) | TFC | TVC | MC | MR | TR | TC | இலாபம் |
|---|---|---|---|---|---|---|---|
| 0 | Rs. 5 | Rs.0 | | Rs. 5 | | | |
| 1 | Rs. 5 | Rs.3 | | Rs. 5 | | | |
| 2 | Rs. 5 | Rs.5 | | Rs. 5 | | | |
| 3 | Rs. 5 | Rs.9 | | Rs. 5 | | | |
| 4 | Rs. 5 | Rs.16 | | Rs. 5 | | | |
| 5 | Rs. 5 | Rs.25 | | Rs. 5 | | | |
| 6 | Rs. 5 | Rs.36 | | Rs. 5 | | | |

(10 புள்ளிகள்)

6.

a) அளவுத்திட்ட சிக்கனமானது உற்பத்தி தொழிற்பாடொன்றின் அதிகரித்துச்செல்லும் அளவுத்திட்டத்துடன் தொடர்புப்படும் நீண்டகால செலவு வளையியின் குறிப்பிட்ட ஒரு வீச்சினுள் ஏற்படுவதாகும். இத்தகைய சிக்கனத்தினை ஏற்படுத்தும் காரணிகள் எவை? சுருக்கமாக விளக்குக.

(07 புள்ளிகள்)

b) நீண்டகால சராசரி செலவு வளையி ஏன் திட்டமிடல் வளையி எனவும் அழைக்கப்படுகின்றது விளக்குக.

(08 புள்ளிகள்)

c) குறுங்கால செலவினை கருத்திற் கொண்டு பின்வரும் வெளிப்படை உண்மையினை நிறுவுக.

$$MC = W\frac{1}{MP}$$

MC – எல்லைச்செலவு

MP – எல்லை உற்பத்தி

W - கூலி

(10 புள்ளிகள்)

7.

a) ஒரு நிறைப்போட்டி நிறுவனத்தின் கீழ் குறுங்கால மற்றும் நீண்டகால சமனிலைக்கிடையிலான வேறுபாட்டினை விளக்குக. ஒரு நிறுவனம் குறுங்காலத்தில் சமனிலையில் இருக்கும் போது அந்நிறுவனம் நிண்டகால சமனிலையிலும் இருக்குமா? விளக்குக.

(10 புள்ளிகள்)

b) ஏன் தனியுரிமை போட்டியில் விளம்பரப்படுத்தல் மற்றும் விற்பனைச்செலவுகள் முக்கியமானதாக கருதப்படுகின்றது?

(08 புள்ளிகள்)

c) வரைபடத்தை பயன்படுத்தி தனியுரிமையின் விலைப்பேதப்படுத்தலை விளக்குவதோடு விலைப்பேதப்படுத்தலுக்கு தேவையான நிபந்தனைகளையும் சுருக்கமாக கலந்துரையாடுக.

(07 புள்ளிகள்)

8. பின்வருவனவற்றில் எவையேனும் இரண்டிற்கு (02) சுருக்கக் குறிப்புக்கள் எழுதுக.

a) வருமான நுகர்வு வளையி மற்றும் விலை நுகர்வு வளையி

b) எல்லை தொழிநுட்ப பதிலீட்டு வீதம் (MRTS)

c) உற்பத்தியின் அளவுத்திட்ட விளைவு

d) கொப்- டக்லஸ் உற்பத்திச்சார்பு

e) சிலருரிமையின் முறிந்த கேள்விக்கோடு

(ஒவ்வொன்றிற்கும் 12.5 புள்ளிகள்)

*****